**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காப்பியம் என்னும் சொல் முதன் முதலில் என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?
2. தமிழ் காப்பியம் பற்றிக் கூறும் இலக்கணநூல்கள் இரண்டினை எழுதுக.
3. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் மூன்று தலைமை மாந்தர் யாவர்?
4. மாதவியும் மணிமேகலையும் யாரிடம் அறம் கேட்டுத் தெளிவுறுகின்றனர்?
5. கம்பர் எழுதிய பிற நூல்கள் யாவை?
6. பெரிய புராணத்தின் மற்றொரு பெயர் யாது?
7. பாரதம் என்ற பெயர் எதனால் ஏற்பட்டது?
8. பெருங்கதையைத் தம் உரைகளில் குறிப்பிடும் பழைய உரையாசிரியர்கள் இருவர் பெயரை எழுதுக.
9. கிருஷ்ணப்பிள்ளை இரட்சண்ய யாத்திரிகத்தில் பயன்படுத்தியுள்ள ஒரு இந்து சமயத் தொடரை எழுதுக.

10. கிறித்தவக் காப்பியங்கள் இரண்டின் பெயரினை எழுதுக.
11. இசுலாமிய இரட்டைக் காப்பியங்கள் யாவை?
12. சாந்த முனிவர் மூலம் எவற்றை அறிந்து சுத்தன் மகிழ்ந்தான்?
13. ஏனியட்டின் கதைக்கரு யாது?
14. 'வீராயி' காப்பியம் எடுத்துரைக்கும் செய்தி யாது?
15. தமிழ் மொழிக் காப்புப் பணியில் இரண்டினைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
2. மணிமேகலா தெய்வத்தின் செயல்பாட்டினை எழுதுக.
3. யாக்கை நிலையாமை பற்றி குண்டலகேசி குறிப்பிடும் கருத்து யாது?
4. சீறாப்புராணம் கூறும் இசுலாமியக் கோட்பாட்டை எழுதுக.
5. கம்பர் பற்றி வழங்கும் பழந்தொடர்களை எழுதுக.
6. அகலிகை வெண்பாவில் அகலிகையின் அழகு எவ்வாறு புனையப்பட்டுள்ளது?
7. மொழிப் போராட்டத்தின் தேவை குறித்து பூங்கொடி கூறுவன யாவை?
8. இயேசு காவியத்தில் இயேசுவின் கொள்கையைக் கண்ணதாசன் எவ்வாறு விளக்குகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிலப்பதிகாரத்தின் கதைப் பின்னலை எழுதுக.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணியின் காப்பியக் கட்டமைப்பை விளக்குக.

2. (அ) கம்பரின் கவித்திறத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மெய்ப்பொருள் நாயனாரின் பக்திச் சிறப்பை விவரிக்க.

3. (அ) இரட்சண்ய யாத்திரிகம் ஒரு முற்றுவகக் காப்பியம் என்பதை நிரூபிக்க.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் பெருமையை இக்காலத் தமிழ்க் காப்பியங்களின் வழி விளக்குக.

***